**சமஸ்த லங்கா சாசனாரக்சக சபை நிதியம் - 2019**

-----------------------------------------------------------------------

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-----------------------------------------------------

சமஸ்த லங்கா சாசனாரக்சக சபை நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றம் செலவினக் கணக்கு திரண்ட நிதிய மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

-----------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய

ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய

ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டு அறநெறிப் பாடசாலை தினத்தை முன்னிட்டு அச்சிடப்பட்ட ரூபா 10,670,500 பெறுமதியான 1,067,050 கொடிகள் மற்றும் ரூபா 2,490,250 ஆன 99,610 ஸ்டிகர்கள் 314 சாசனாரக்ஷன சபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப் பட்டிருந்தன. கொடி விற்பனை வருமானத்தை கணக்கீடு செய்யும் போது மாதாந்த வங்கி கூற்றுக்களின் பெறுவனவுகளின் கூட்டுத்தொகை வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் கொடி விற்பனை வருமானமாக ரூபா 4,145,363 கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் அதில் ரூபா 1,060,580 தொகையை உறுதிப்படுத்துவதற்காக கொடி விற்பனை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிவல்லை. | எதிர்காலத்தில் முறையான வேலைத்திட்டமொன்றுடன் கொடி விற்பனை செய்தல், வருமானங்களைச் சேகரித்தல் மற்றம் எஞ்சிய கொடிகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொள்கின்றேன். | விற்பனை அறிக்கைகள் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையை ஒழுங்கமைத்தல், மேற்பார்வை உத்தியோகத்தரை நியமித்தல், மற்றும் திசெம்பர் 31 ஆம் திகதி எஞ்சியிருக்கும் கொடிகளுக்கான கணிப்பீட்டிற்கான முறைமையொன்றை அறிமுகப்படுத்தல் |

| | | |
|---|---|---|
| மேலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு விற்கப்பபடாது எஞ்சியிருந்த கொடிகளின் எண்ணிக்கை தொடர்பான அறிக்கை நிதியத்திடம் காணப்படாத காரணத்தினால் கணக்கிடப்பட்ட வருமானத்தின் சரியானதன்மை மற்றும் பூரணத்துவத்தை உறுதி செய்ய முடியவில்லை. | | |

### 1.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ம் ஆண்டு 16 ம் இலக்க சமஸ்த லங்கா சாசனாரக்சக சபை (கூட்டிணைத்தல்) சட்டத்தின் சட்டத்தின் 6 ஆம் பந்தியில் நிதியத்தின் பொது அதிகாரங்களின் கீழ் காணப்படும் (அ) மற்றும் (ஊ) உப பந்திகளின் படி நிதியத்தின் குறிக்கோள்களை நடைமுறைப் படுத்துவதற்காக தேவையான உத்தியோகத்தர்களையும் பணியாளர்களையும் நியமிப்பதற்கும் சேவையில் ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது இரு உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | நிரந்தர பதவியணியை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறுகள் ரூபா 12,491,355 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,514,220 ஆக இருந்தது. அதற்கமைவாக நிதி விளைவுகளில் ரூபா 8,977,135 ஆன அதிகாரிப்பு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் கட்டிட உதவியாக ரூபா 2,300,000 கொடுப்பனவு செய்யப்பட்ட போதும் நன்கொடையாக ரூபா 10,000,000 நிதியத்திற்கு கிடைத்தமையால் இவ்வளர்ச்சிக்கு முக்கிய காரணமாகக் காணப்படுகின்றது.

3. **செயற்பாட்டு மீளாய்வு**

3.1 **முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பௌத்த துறவிகளின் பெற்றோர்களுக்கு உதவி, புரியும் நோக்குடன் "பௌத்த பிள்ளைகளின் பெற்றோர் நம்பிக்கை பொறுப்பு" எனும் நிதியத்தில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,051,167 ஆன மீதியொன்று இருந்தது. எவ்வாறாயினும் 2017 ஆம் ஆண்டு வரை சமர்ப்பிக்கப்பட்ட 748 வீடுகள் கோரல் விண்ணப்பங்கள் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சிற்கு அனுப்பியமை மற்றும் மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட 9 வீடமைப்பு விண்ணப்பங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை காரணமாக வேண்டுகோளை நிறைவேற்றுவதற்கு போதியளவு நிதி நிதியத்தில் இருக்கும் போதும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு எவ்வித வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் செயற்படுத்தி யிருக்கவில்லை | வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சிற்கு அனுப்பிய விண்ணப்பங்கள் அமைச்சரின் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பௌத்த பெற்றோர் வீடமைப்பு செயற்திட்டம் புத்தசாசன நிதியம் தொடர்பாக செயற்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதும் தவிர்க்க முடியாத காரணங்களினால் தாமதமாகியிருந்தது, | நிதியம் நிறுவப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிதியம் வினைத்திறனுடன் செயல்படுவது அவசியமாகும். |
| (ஆ) | நாட்டில் ஒரு சாசனராக்ஷ சபைக்கு ஒரு மாணவர் / மாணவர் வீதம் தெரிவுசெய்து மாதமொன்றுக்கு ரூபா 500 | எதிர்காலத்தில் நடாத்தப்படும் அறநெறி பாடசாலை தின விழாவுடன் | தெரிவு செய்தல் தொடர்பாக உள்ள சிக்கல்களை தீர்வு செய்து |

| | | |
|---|---|---|
| வீதம் 24 மாதங்களுக்கு ரூபா 12,000 வழங்கும் நோக்கில் அறநெறி பாடசாலை புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் 2018 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது 288 சாசனராக்ஷக்க சபைகளிலிருந்து 262 மாணவர்கள் இந்நிகழ்ச்சித் திட்டத்திற்காக தகைமை கொண்டிருக்கையில் புலமைப் பரிசில் வழங்குவதற்காக 139 மாணவர்கள் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டு அதில் 20 மாணவர்களுக்கு மாத்திரம் 10 மாதங்களுக்கு புலமைப்பரிசில் உதவியாக ரூபா 100,000 மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் பதுளை, புத்தளம், முல்லைதீவு மற்றும் வவுனியா மாவட்டங்களுக்குரிய 35 சாசனராக்சக்க சபைகளிலிருந்து இந்த புலமைப்பரிசில்களுக்காக மாணவர்களை தெரிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிவல்லை. | இணைந்ததாக புலமைப்பரிசில் பெறுவோருக்கு புலமைப்பரிசில் வழங்கப்படும். பதுளை, புத்தளம், முல்லைதீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களின் பதிவாளர்களால் 2017 அறநெறி அறிவு திறன் இல் முதலாம் இடத்தை பெற்ற மாணவர்களின் பெயர் அட்டவணைகளை அனுப்பியிருக்கவில்லை. | தகைமையுடைய சகல மாணவர்களுக்கும் நலன்கள் கிடைக்கும் வகையில் புலமைப்பரிசில் வழங்கும் செயற்பாட்டை முறைப்படுத்த வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்தை மேம்படுத்தும் நோக்கில் ரூபா 300 தொகைக்கு அறநெறி பாடசாலைகளில் விற்பனை செய்வதற்காக 9 ஆண்டுகளுக்கு முன்னர் துணியால் அச்சிடப்பட்ட 2,471 அறநெறி பாடசாலை கொடிகள் பௌத்த விவகார திணைக்களத்தின் | பொருத்தமான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிர்வாக சபையால் இது தொடர்பாக கலந்துரையாடி பொருத்தமான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| களஞ்சியத்திலும் செயற்திட்ட பிரிவிலும் களஞ்சியப் படுத்தப்பட்டிருந்தன. இக்கொடி இருப்பு தொடர்பாக இருப்பு பதிவேடுகள் பேணிச் செல்லப்படாமல் இருந்ததுடன் கொடிகளை விற்பனை செய்யும் போது பற்றுச்சீட்டுக்கள் வழங்குதலும் இடம்பெற்றிருக்க வில்லை. மேலும் கொடி விற்பனை அல்லது வேறு பொருத்தமான வேலைத் திட்டமொன்றை ஈடுபடுத்தி எஞ்சிய இருப்பினை விநியோகிப்பதற்கு நிதியத்தின் நிர்வாக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |

**3.3 நிதியங்களின் குறைப்பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 இன் 16 ஆம் இலக்க சமஸ்த லங்கா சாசனாரக்சக சபை (கூட்டிணைத்தல்) சட்டத்தின் சட்டத்தின் 3 ஆம் பந்தியில் (அ) முதல் (ஒ) வரையான நிதயத்தின் பொது இலக்கு 9 ஆக இருந்ததுடன் அந்நோக்கங்கள் நிறைவேற்று வதற்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 6,077,824 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு, நடைமுறை மற்றும் நிலையான வைப்புக்களில் ரூபா 50,003,897 எனக் காணப்பட்ட போதும் பொது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அந்நிதியத்தை செயற்திறனாக ஈடுபடுத்துவது தொடர்பில் நிதியம் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆண்டின் போது மாணவ மாணவி களுக்கு புலமைப் பரிசில், மருத்துவ உதவிகள் மற்றம் கட்டிட உதவிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | நிதியம் நிறுவப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிதியம் வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 133 (ஆ) 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க மற்றும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்திக்கு அமைவாக நிதியத்தின் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ள வேண்டிய போதும் மீளாய்வாண்டில் அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு பிரிவொன்று இல்லாமையினால் கணக்காய்வு செய்யப்படவில்லை. | திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும். |